18.07.2023
O.S.No.181/2014

வா.சா.1 திரு.முத்துலிங்கம் த.பெ.ராஜேந்திரன்

சாட்சி இன்று அழைக்கப்பட்டு சத்திய பிரமாணம் செய்து வைக்கப்பட்டார்.

பிரதிவாதி தரப்பு குறுக்கு **விசாரணை**

1. நான் 1972ம் ஆண்டு பிறந்தேன். எனது தந்தைக்கு பாத்தியப்பட்ட சொத்தை பிரதிவாதிகள் பகிர்ந்து வைத்துள்ளதால் அது செல்லாது என கோரி இந்த வழக்கை தாக்கல் செய்துள்ளேன். வா.சா.ஆ-17 தானசெட்டில்மெண்ட் ஆவணத்தை நான் படித்து பார்த்துள்ளேன். மேற்படி ஆவணம் மூலம் முத்தையா, முல்லைச்செல்வனுக்கு தானசெட்டில்மெண்ட் 29.10.2007 அன்று எழுதி கொடுத்துள்ளார். மேற்படி முத்தையா என்பவர் எனது தந்தையின் தந்தை ஆவார். எனது தந்தையின் தாயார் பெயர் ஆண்டிச்சி ஆகும். எனது தந்தை உடன்பிறந்தவர்களில் எனது அத்தை அமிர்தம் மூத்தவர், எனது பெரியப்பா கெட்டி, மற்றொரு பெரியப்பா மகாலிங்கம் மற்றொரு அத்தை பாப்பா அதன்பின்பு எனது தந்தை ஆகியோர்கள் மேற்படி முத்தையா, ஆண்டிச்சி ஆகியோருக்கு பிறந்தவர்கள் ஆவார்கள். எனது பெரியப்பா கெட்டி என்பவர் திருமணம் ஆகாமலேயே இறந்துவிட்டார் என்றால் சரிதான், அவருக்கு வேறு எந்த வாரிசுகளும் கிடையாது என்றால் சரிதான். நான் பிறந்தபோது எனது தந்தைக்கு சுமார் 31 வயதிருக்கும்.

2. எனது அத்தை பாப்பா என்பவருக்கு 1968ம் ஆண்டு திருமணம் நடைபெற்றது என்றால் அது எனக்கு தெரியவில்லை. ஆனால் எனது தந்தைக்குதான் கடைசியாக திருமணம் ஆனது. எனது தந்தைக்கும் எனது பெரியப்பா மகாலிங்கத்திற்கும் இடையே 9 வயது வித்தியாசம் என்றால் சரிதான். எனது அத்தை அமிர்தம் மதுரை மாவட்டம் கொட்டானிப்பட்டி கிராமத்தில் வசிக்கிறார் என்றால் சரிதான். அவர் தனது தாய்மாமாவான கோபால் என்பவரை திருமணம் செய்து கொண்டார் என்றால் சரிதான். பாப்பா, பொன்னம்பலம் என்பவரை திருமணம் செய்து வெள்ளலூரில் வசித்து வருகிறார் என்றால் சரிதான். எனது தந்தையின் பிறந்த தேதி எனக்கு தெரியாது. எனது பெரியப்பா மகாலிங்கம் 07.12.1948ல் பிறந்ததாக என்னிடம் காட்டப்படும் அவரது பள்ளி சான்றிதழில் காணப்படுகிறது என்றால் சரிதான். நான் 1972ல் தான் பிறந்தேன், ஆனால் அதை பற்றி எனக்கு தெரியாது. வா.சா.ஆ-17 தானசெட்டில்மெண்ட் ஆவணத்தில் 1ம் இலக்க சொத்தான வெள்ளலூர் கிராம சர்வே எண்.316/2 என காட்டப்பட்டுள்ளது. அதே போல் 2ம் இலக்கசொத்து மேற்படி கிராம சர்வே எண்.316/3 என காட்டப்பட்டுள்ளது. 3ம் இலக்க சொத்து சர்வே எண்.297/1 காட்டப்பட்டுள்ளது.

3. முத்தையா, மகாலிங்கம் மற்றும் ராஜேந்திரன் ஆகிய மூவரும் சேர்ந்து முத்தையாவிற்கு பாத்தியப்பட்ட பூர்வீக சொத்துக்களை பொறுத்து பதிவு செய்யப்பட்ட பாகபிரிவினை பத்திரம் எழுதி கொண்டார்கள் என்றாலும் அந்த ஆவணம் தான் வா.சா.ஆ-1 என்றாலும் சரிதான். வா.சா.ஆ-1 ஆவணப்படி ஏ செட்டியூல் சொத்துக்கள் முத்தையாவிற்கும், பி செட்டியூல் சொத்து மகாலிங்கத்திற்கும் சி செட்டியூல் சொத்துக்கள் ராஜேந்திரனுக்கும் ஒதுக்கப்பட்டது என்று சொன்னால் சரிதான். வா.சா.ஆ-1 ஆவணத்தில் முத்தையாவிற்கு பாகமாக கிடைத்த ஏ செட்டியூல் சொத்தை அவர் உயிருடன் இருக்கும் போது வில்லங்க விவகாரம் செய்து விடலாம் என்றும் அவ்வாறு

அவரது காலத்திற்கு பின்பு மீதமுள்ள சொத்தை பி மற்றும் சிசெட்டியூல் சொத்துக்காரர்கள் சரிசமபாகமாக பிரித்துக்கொள்ள வேண்டியது என காட்டப்படுகிறது என்றால் சரிதான். வா.சா.ஆ-17 தானசெட்டில்மெண்ட் ஆவணத்தில் கண்டுள்ள 1, 2, 3 இலக்க சொத்துக்கள் மேற்படி முத்தையாவின் பாக சொத்துக்கள் என்றால் சரிதான். வா.சா.ஆ-17 ஆவணத்தில் மகாலிங்கம் மற்றும் ராஜேந்திரன் ஆகியோரின் உடல் உழைப்பு மூலம் கிடைத்த வருமானத்தில் இருந்து முத்தையா பெயரில் சொத்துக்கள் வாங்கப்பட்டதாக எந்த வாசகமும் காணப்படவில்லை என்றால் சரிதான்.

4.வா.சா.ஆ-1 ஆவணத்தில் வேறு ஏதேனும் சொத்துக்கள் பிரிக்கப்பட வேண்டியது இருந்தால் வேறு தஸ்தாவேசு மூலமாகதான் பிரிக்கப்பட வேண்டும் என்று காணப்பட்டுள்ளது என்றால் சரிதான். வா.சா.ஆ-17 ஆவணத்தில் 4ம் இலக்க சொத்து சென்ட்ரிங் வீடு என்றும் அதன் மொத்த சதுரடி 2080 எனவும் அதில் மேல்புறம் பாதி 1040 சதுரடி என காட்டப்பட்டுள்ளது என்றால் சரிதான். மேற்படி சென்ட்ரிங் வீடு நீள வாக்கில் உள்ள வீடு என்றால் சரியல்ல, 2 போர்சனாக உள்ளது. வா.சா.ஆ-17 ஆவணத்தில் கண்ட 4ம் இலக்க சொத்தானது தாவா 1ம் இலக்க சொத்திற்கு மேற்கு புறம் உள்ளது என்றால் சரிதான். வா.சா.ஆ-17ல் கண்டுள்ள சொத்துக்களின் அளவுகள் எனக்கு தெரியும் என்றால் நான் அளந்து பார்க்கவில்லை. தாவா 1ம் இலக்க சொத்தில் நீள, அகல, விஸ்தீரணம் எதுவும் காணப்படவில்லை என்றால் சரிதான். தாவா 1ம் இலக்க சொத்தின் முறையான அடி அளவுகள் எதுவும் குறிப்பிடாததால் அந்த சொத்தை எனக்கு எந்தவித பரிகாரமும் கிடைக்கதக்கதல்ல என்றால் சரியல்ல. நான் வழக்கு தாக்கல் செய்த போது தாவா 1ம் இலக்க சொத்து எனது அனுபவத்தில் இருந்திருந்தால் அதை முறையாக அளந்து அதன் நீள, அகலத்தை சொத்து விவரத்தில் குறிப்பிட்டு இருப்பேன் என்றால் சரியல்ல. தாவா 1ம் இலக்க சொத்தின் மேற்குபுறம் உள்ள வீட்டின் கதவு எண்.2/221 என்றால் அதை பற்றி எனக்கு தெரியாது, ஆனால் எங்கள் வீட்டின் கதவு எண்.2/222.

5.வா.சா.ஆ-17ல் கண்டுள்ள 5ம் இலக்க சொத்தானது தாவா 1ம் இலக்க சொத்தின் வடக்கே உள்ளது என்றால் சரிதான். தாவா 2ம் இலக்க சொத்திற்கு நீள, அகலம் போட்டுள்ளேன் என்றால் சரிதான். எங்கள் ஊரைச் சார்ந்த முத்ரி என்பவரின் மகன்தான் போஸ் என்றால் சரிதான். மேற்படி முத்ரி காலமாகிவிட்டார், மேற்படி போசின் மனைவிதான் பாண்டியம்மாள் என்றால் சரிதான். எங்கள் ஊரில் சோமன் மற்றும் முருகேசன் மந்தக்கோவில் அருகே குடியிருந்து வருகிறார்கள். தாவா சொத்திற்கும் அவர்கள் குடியிருப்புக்கும் சுமார் 200 மீட்டர் தொலைவு இருக்கும். வா.சா.ஆ-17 தானசெட்டில்மெண்ட் பத்திரத்தில் கண்ட 4 மற்றும் 5 இலக்க சொத்துக்களுக்கு சேர்த்துதான் நான்குமால் காட்டப்பட்டுள்ளது என்றால் சரிதான். ஆனால் மேற்படி 2 சொத்துக்களுக்கும் நடுவே சந்து உள்ளது, அதை அதில் காண்பித்துள்ளேன். மேற்படி நான்குமால்கள் அந்த பத்திரம் எழுதியபோது காணப்பட்டவை என்றாலும் அந்த நான்கு மால்கள் காலத்திற்கு ஏற்றார்போல் மாறுபட வாய்ப்புள்ளது என்றாலும் சரிதான்.

6. வா.சா.ஆ-2 ஆவணம் எனது தாத்தா முத்தையாவிற்கு மந்தையன் மக்கள் கருப்பையா மற்றும் இதர வாரிசுகள் சேர்ந்து 28.05.1975 அன்று எழுதிக்கொடுத்த கிரய ஆவணம் என்றால்

சரிதான். மேற்படி வா.சா.ஆ-2ல் கண்ட சொத்தைதான் என் தந்தையின் பாகமாக என்னுடைய தாத்தா முத்தையா அவர்கள் ஒதுக்கி கொடுத்ததாக பிராதில் சொல்லி உள்ளேன் என்றால் சரிதான். வா.சா.ஆ-2 கிரய ஆவணத்தில் கண்டுள்ள வீட்டின் கிழமேல் ஜாதியடி 40, தென்வடல் ஜாதியடி 30 என காட்டப்பட்டுள்ளது என்றால் சரிதான். வா.சா.ஆ-2 ஆவணப்படி மொத்தம் 7 செண்டு கிரயம் பெறப்பட்டுள்ளது என்றாலும் தாவா 3ம் இலக்க சொத்து மேற்படி 7 செண்டில் அமைந்துள்ள வீடு என்றாலும் வா.சா.ஆ-2 ஆவணத்தில அவ்வாறு தான் காணப்படுகிறது, ஆனால்அதில் உள்ள ஓடுவீடு இடிந்து விட்டது, என் தந்தைக்கு கொடுக்கும் போது காலியிடமாகதான்கொடுத்தார்கள். அதில் நாக்ஙள் தற்போது ஓட்டுசாய்ப்பு போட்டுள்ளோம், மேற்படி 7 செண்டில் என் தந்தைகது ஒதுக்கப்ட்ட பாகம் 2-1/2 செண்டு ஆகும். மேற்படி 2-1/2 செண்டு 7செண்டுநிலத்தில் தென்புறத்தில் ஒதுக்கப்பட்டுள்ளது. எனது பிராதில் எனது தந்தைக்கு மேற்படி 7 செண்டில் 2-1/4 செண்டு ஒதுக்கப்பட்டதாக குறிப்பிடப்பட்டுள்ளது என்றால் சரிதான்.

7. மேற்படி 2-1/4 செண்டு நிலம் காலியாகதான் கொடுக்கப்பட்டது என்றும் ஓட்டுவீடாக கொடுக்கப்படவில்லை என்றும் எனது பிராதிலோ நிருபண வாக்குமூலத்திலோ சொல்லியுள்ளேனா என்றால் இல்லை, ஆனால் காலியிடமாகதான் எனது தந்தைக்கு பாகம் ஒதுக்கினார்கள், அதன்பின்பு எனது தந்தை அதில் ஓட்டுசாய்ப்பு போட்டுள்ளார். மேற்படி 7 செண்டில் மகாலிங்கம் பாகத்திற்கு ஒதுக்கப்பட்ட வடக்குபுறம் உள்ள மீத சொத்தில் அவரது மக்கள் வீடு கட்டி கதவு எண்.2/221பி ல் குடியிருந்து வருகிறார்கள் என்றால் சரியல்ல, அது தற்போது வரை காலியிடமாகத்தான் உள்ளது. வா.சா.ஆ-2 ஆவணத்தில் கண்டுள்ள 7 செண்டு சொத்தின் வடக்குபுறம் ரோடு அமைந்துள்ளதாக காணப்படுகிறது என்றால் சரிதான். மேற்கே தங்களுடைய வீடும், முத்ரி வகையறா காலி இடமும் காணப்படுகிறது என்றால் சரிதான், ஆனால் தற்போது அது பாதையாக உள்ளது. அந்த காலத்தில் நான்குமால் காண்பிக்கும் போது சொத்தை ஒட்டி நத்தம் காலிமனையிடம் என்பதை காண்பிக்க மாட்டார்கள் என்றாலும் அதன் அருகில் உள்ள தனிநபருக்கு பாத்தியப்பட்ட சொத்தைதான் காண்பிப்பார்கள் என்றாலும் சரிதான்.

8. அதே போல்தான் வா.சா.ஆ-17 ஆவணத்திலும் 4, 5 இலக்க சொத்திற்கு நான்குமால் காட்டப்பட்டுள்ளது என்றாலும் அது பொய் என ஏற்றுக்கொள்ள முடியாது என்றாலும் சரியல்ல. வா.சா.ஆ-1 ஆவணத்தில் நஞ்சை புஞ்சை நிலங்கள் மட்டும் தான் பிரித்துக்கொண்டதாக காணப்படுகிறது என்றாலும் சரிதான். 1980ம் ஆண்டு வாய்க்கரலாக வீடு, ஓட்டுக்கூடம், தளம், மாட்டுக்கொட்டகை ஆகியவற்றை பிரித்துக்கொண்டதாக சொல்வதால் அவ்வாறு பிரித்து தனித்தனியாக 1980ம் ஆண்டு முதல் அனுபவித்து வருவதற்கு ஏதேனும் ஆவணம் தாக்கல் செய்துள்ளேனா என்றால் வீட்டுவரி ரசிது மற்றும் மின்சார வரி ரசீது காண்பித்துள்ளேன். மேற்படி ரசீதுகள் 1980 முதல் அனுபவித்து வருவதற்கு உண்டான ரசீதுகள் அல்ல என்றாலும் சரியல்ல. எனது உடன்பிறந்த சகோதரர்கள் சுப்பிரமணியன் மற்றும் சேதுராமன் ஆகியோர்கள் வெளிநாட்டில் வேலை

பார்த்து வருகிறார்கள் என்றால் சரியல்ல, சுப்பிரமணியன் மட்டும் வெளிநாட்டில் உள்ளார், சேதுராமன் கடந்த 5 ஆண்டுகளாக இங்குதான் உள்ளார். இந்த வழக்கில் சுப்பிரமணியனை தாவாவில் சேர்த்தால் எனது வழக்கிற்கு பாதகமாகி விடும் என்பதால் அவரை சேர்க்கவில்லை என்றால் சரியல்ல, அவர் வெளிநாட்டில் வேலை பார்த்து வருவதால் அவரை இந்த வழக்கில் சேர்க்கவில்லை.

9. 1ம் பிரதிவாதி முல்லைசெல்வன் தாவா தாக்கல் செய்தபோது வெளிநாட்டில் வேலை பார்த்து வந்தார், தற்போது இங்குதான் வேலை பார்த்து வருகிறார். சுப்பிரமணியனை பிரதிவாதியாக கூட இந்த வழக்கில் நான் ஏன் சேர்க்கவில்லை என்றால் அவர் வெளிநாட்டில் இருப்பதால் சேர்க்கவில்லை. சுப்பிரமணியனும் நானும் ராஜேந்திரன் அவர்களின் வாரிசுதாரர் என்றால் சரிதான். 1 முதல் 5 பிரதிவாதிகள் எனது பெரியப்பா மகாலிங்கத்தின் வாரிசுகள் என்றால் சரிதான். முத்தையா எப்போது இறந்தார் என்றால் 2012ம் ஆண்டு இறந்தார். மேற்படி முத்தையா இறந்த பின்பு அவரது சொத்துக்களை பிரிக்கும் வகையில் எங்கள் தரப்பினருக்கும் எனது பெரியப்பா மகாலிங்கத்தின் வாரிசுதாரருக்கும் இடையே பிரச்சினை ஏற்பட்டு மாண்பமை சார்பு நீதிமன்றம், மேலூரில் அசல் வழக்கு எண்.76/2014 (Re number O.S.No.54/2019) நடந்து முடிந்தது என்றால் சரிதான். அதில் உள்ள பகையின் காரணமாகத்தான் இந்த வழக்கில் வா.சா.ஆ-17 தானசெட்டில்மெண்ட் செல்லாது என கோரி வழகக்கு தாக்கல் செய்துள்ளேன் என்றால் சரியல்ல. தாவா சொத்துக்களை பொறுத்து எனக்கு தனித்து பாத்தியப்பட்டது என விளம்புகை பரிகாரம் கேட்டுள்ளேனா என்றால் இல்லை.

10. அசல் வழக்கு எண்.76/2014 வழக்கில் பெண்களுக்கும் சம பாகம் உண்டு என எதிர்வழக்குரை தாக்கல் செய்துள்ளேன் என்றால் சரிதான். இந்த வழக்கில் பெண் வாரிசுகள் யாரையும் சேர்க்கவில்லை என்றால் சரிதான். அவர்களை ஏன் சேர்க்கவில்லை என்றால் எனக்கும் பிரதிவாதிக்கும் இடையேதான் பிரச்சினை என்பதால் சேர்க்கவில்லை. எனது தந்தைக்கு திருமணம் ஆகும் வரை அவரது சகோதர சகோதரிகளுடன் ஒரே குடும்பமாக வசித்து வந்தார்கள் என்றாலும் அதன்பின்பு அவரது குடும்பத்துடன் வசித்து வந்தார்கள் என்றாலும் எனக்கு தெரியவில்லை, ஆனால் எனக்கு நினைவு தெரிந்த நாள்முதல் நாங்கள் தனிதனியேதான் வசித்து வருகிறோம். அவ்வாறு ஒரே குடும்பமாக அனைவரும் வசித்து வந்த போதுதான் எனது தந்தை வா.சா.ஆ-2 ஆவணத்தை எடுத்து வைத்து கொண்டு தற்போது அதை தாக்கல் செய்து வருகிறேன் என்றால் அதை பற்றி எனக்கு தெரியாது. வா.சா.ஆ-2 ஆவணத்தை கையில் வைத்து கொண்டுதான் தாவா 3ம் இலக்க சொத்தை எனது தகப்பனாருக்கு பாகமாக ஒதுக்கியதாக சொல்வது உண்மைக்கு புறம்பானது என்றால் சரியல்ல.

11. எனது தாத்தா முத்தையாவை கைக்குள் வைத்துக்கொண்டு 2ம் பிரதிவாதி ஜெயம் ஆதிக்கம் செலுத்தியதாக சொல்வதால் எதன் அடிப்படையில் அவ்வாறு சொல்கிறேன் என்றால் எனதுதாத்தா அவர் மீது இருந்த நம்பிக்கையில் பத்திரம் பதிந்து கொடுத்தார,எங்களுக்கு பத்திரம் எதுவும் பதிந்த கொடுக்கவில்லை, பட்டா மாற்றம் மட்டும் செய்து கொடுத்தார், அவர்கள் எந்த பிரச்சினையும் செய்ய மாட்டார்கள் என்று சொன்னார், ஆனால் தற்போது அந்த பத்திரத்தை

வைத்துக்கொண்டு 2ம் பிரதிவாதி பிரச்சினை செய்தவதால் இந்த வழக்கை நீதிமன்றத்தில் தாக்கல் செய்வதாகிவிட்டது. தாவா 1ம் இலக்கசொத்து ஒரே வீடாக உள்ளது என்றாலும் அதன் மேற்கூரையின் பகுதியை நான் இடித்துவிட்டேன் என்றாலும் சரியல்ல, நடுவில் சுவர் உள்ளது, எங்களது பாகத்திற்கு உள்ள மேற்கூரையில் விரிசல் விழுந்து இடியும் நிலையில் இருந்ததால் பிரதிவாதிகள் தரப்பு பாக சொத்தை பாதிக்கும் என்று அவர்கள் கூறியதன் அடிப்படையில் நான் எனக்கு பாத்தியப்பட்ட மேற்கூரையை பாதி இடித்தேன், அதற்குள் அவர்களே ஆட்சேபித்ததால் அப்படியே நின்றது. மேற்படி மேற்கூரையை இடித்தன் விளைவாக பிரதிவாதிக்கு பாத்தியப்பட்ட பகுதியில் மழைநீர் ஒழுகி தண்ணீர் வருகிறது என்றால் சரியல்ல. 1ம் இலக்க சொத்தின் அளவே போடவில்லை என்றாலும் எங்களுக்கு பாத்தியமான பகுதியை விட கூடுதல் பகுதியை கணக்கிட்டு மேற்கூரையை இடித்துவிட்டேன் என்றாலும் சரியல்ல.

12. முத்தையாவிற்கு நான் மட்டும் தான் ஈமச்சடங்கு செய்தததற்கு ஆதாரம் உள்ளதா என்றால் எனது ஊரைச் சார்ந்தவர்கள் சாட்சி சொல்வார்கள். 1 முதல் 5 பிரதிவாதிகளின் கவனிப்பில் இருந்து வந்தார் என்றால் கடைசி காலத்தில் அவர்கள்தான் கவனித்து வந்தார்கள். நான்தான் முத்தையாவிற்கு ஈமக்கிரியை செய்தேன் என்று இந்த வழக்கிற்காக பொய்யாக சொல்கிறேன் என்றால் சரியல்ல. வெள்ளலூர் கிராம புல எண்.315/14 சொத்தானது தாவா சொத்து அல்ல என்றால் சரிதான், ஆனால் தாவா சொத்திற்கு சம்பந்தம் உள்ளது. **(குறுக்கு விசாரணை தொடர்ச்சி வேறு தேதிக்கு ஒத்திவைக்கப்படுகிறது)**